## மலைவாழ் மக்களுக்கு மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில்

# ‘திராவிட மாடல்’ ஆட்சியில் ஏராளமான திட்டங்கள்!

### மலைவாழ் மக்களின் பயன்பாட்டிற்கு இருசக்கர அவசரகால ஊர்தி சேவையை தொடங்கி வைத்து அமைச்சர் எ.வ.வேலு தகவல்!

**திருவண்ணாமலை, டிச.28-**

**“மக்களைக் காப்பாற்றக் கூடிய பணியில் மக்கள் நல்வாழ்வுத்துறை சிறப்பாகச் செயல்படுகிறது” என்று அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் பாராட்டுத் தெரிவித்தார்.**

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (26.12.2024) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பாக ஜமுனாமரத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் புதிய மருத்துவ கட்டிடங்களை பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், குழும இயக்குநர், தேசிய நலவாழ்வு குழுமம் திட்ட இயக்குநர், தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்டம் மரு. அருண் தம்புராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.என்.அண்ணாதுரை (திருவண்ணாமலை), எம்.எஸ்.தரணிவேந்தன் (ஆரணி), சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி (செங்கம்), எஸ்.அம்பேத்குமார் (வந்தவாசி), பெ.சு.தி.சரவணன் (கலசப்பாக்கம்), ஓ.ஜோதி (செய்யாறு),மாநில தடகளச் சங்கத் துணைத்தலைவர் மரு. எ.வ.வே.கம்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களும், மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பாக ரூ.1.60 கோடி மதிப்பீட்டில் போக்குவரத்து வசதியற்ற மலை கிராமப் பகுதிகளில் வாழும் பழங்குடியினர் மற்றும் இதர மக்களின் அவசர மருத்துவ சேவைகளுக்காக 25 இருசக்கர அவசரகால மருத்துவ வாகனங்கள் (Bike Ambulance) சேவையை தொடங்கி வைத்தும், ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில் பழங்குடியினர் நலவாழ்வை மேம்படுத்தும் வகையில் மலைவாழ் பகுதிகளில் செயல்பாட்டில் உள்ள 20 நடமாடும் மருத்துவ வாகனங்களுக்கு (MMU) இரத்த பரிசோதனைகளுக்கான பகுப்பாய்வு கருவிகள் (SemiAuto Analyzer) வழங்கினார்கள்.

தொடர்ந்து, 15-வது நிதிக்குழுவின் கீழ் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பாக ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் கலசபாக்கம் ஊராட்சி ஒன்றியம், அத்திப்பட்டு ஊராட்சியில் துணை சுகாதார நிலையம், அரியூர் ஊராட்சியில் ரூ. 1.20 கோடி மதிப்பீட்டில் ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடமும், தௌ;ளார் ஊராட்சியில் ரூ. 50 இலட்சம் மதிப்பீட்டில் வட்டார பொது சுகாதார அலகு நிலைய கட்டிடம், தச்சூர் ஊராட்சியில் ரூ. 50 இலட்சம் மதிப்பீட்டில் வட்டார பொது சுகாதார அலகு நிலைய கட்டிடம், நெடுங்குணம் ஊராட்சியில் ரூ. 35 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டிடம்,

அத்திப்பட்டு ஊராட்சியில் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டிடம், சௌந்தர்யபுரம் ஊராட்சியில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டிடம், கீழ்நர்மா ஊராட்சியில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டிடம், கொம்மனந்தல் ஊராட்சியில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் வட்டார பொது சுகாதார அலகு நிலைய கட்டிடமும், சிறுகட்டூர் ஊராட்சியில் ரூ.30 இலட்சம்



மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டிடங்கள் என மொத்தம் 09 புதிய கட்டிடங்களை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள்.

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு அவர்கள் சிறப்புரையாற்றியதாவது :

ஜமுனாமரத்தூர் ஊராட்சி ஒன்றியப்பகுதியில் இருசக்கர அவசர கால ஊர்தி, புதிய கட்டிடங்களை திறந்து வைக்கின்ற நிகழ்வு சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத் துறை, கூட்டுறவுத்துறை, சமூக நலத்துறை உள்ளிட்ட 7 துறைகளின் சார்பாக 395 பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற நிகழ்வாக நடைபெற்று கொண்டிருக்கின்றது. மேலும் அவசர கால ஊர்தி என்று அழைக்கின்ற 108 என்ற வாகனம் முத்தமிழறிஞர் கலைஞர்கள் அவர்கள் ஆட்சியில் தான் செயல்படுத்தப்பட்டது. அவர்களின் வழியில் ஆட்சி நடத்திக்கொண்டிருக்கின்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 108 அவசர கால ஊர்தி செல்ல முடியாத மலை வாழிடங்களில் இருசக்கர அவசர கால ஊர்தி வடிவமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது.

அது மட்டுமில்லாமல் போளூர், பரமனந்தல், ஆலங்காயம் வழியாக தார் சாலைகள், மலைப் பகுதியில் மின்சாரம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் அனைத்து கிராமங்களிலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் தொட்டி, பேருந்து வசதி என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் தான் கொண்டுவரப்பட்டது.

மலைவாழ் மகளிர்களுக்கு கட்டணமில்லா விடியல் பேருந்து பயணம், 2023 நிதி நிலை அறிக்கையில் வனத் துறை அனுமதியுடன் 77 கி.மீ மலைப்பாதைகள் அமைக்க சட்டப்பேரவையில் அறிவித்ததோடு மட்டுமில்லாமல், அரசாணை 116ன் கீழ் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, இந்த மலைப்பாதைகளில் 371 சிறுபாலங்களும், 25 சிறிய மற்றும் பெரிய பாலங்கள் கட்டுவதற்கும், 26 கொண்டை ஊசி வளைவுகள் மேம்படுத்த வேண்டும்.

மண்ணின் உறுதித்தன்மையை தக்க வைப்பதற்காக 45 இடங்களில் தடுப்புச் சுவர் கட்ட வேண்டும். 24 இடங்களில் அணைப்புச் சுவர், 22 இடங்களில் வடிகால் அமைக்க வேண்டும் என்ற அடிப்படையில் ரூ. 205 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆகவே, மலைக்கு சாலை முக்கியம் மற்றும் உயிர் வாழ்வதற்கு மருத்துவ வசதி தேவை. முதலமைச்சர் அவர்கள் உலகத்தில் இல்லாத வகையில் மக்களைத் தேடி, மருத்துவம் என்ற சிறப்பான திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். நாம் மருத்துவரை அணுகி காத்திருந்த நாட்கள்; சென்று, மக்களின் வீடு தேடிச் சென்று மருந்து மாத்திரைகளை கொடுக்கின்ற நிலையை உருவாக்கியிருக்கிறார்கள் என்றால் திராவிட மாடல் ஆட்சி நடத்துகின்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத்துறை சார்பாக திருவண்ணாமலை மாவட்டத்தில் பல்வேறு திட்டப் பணிகளை செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். 24 மணி நேரமும் இயங்கி கொண்டிருக்கின்ற துறை என்றால் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை ஆகும். ஒரு ஆட்சி சரியாக இருந்தால் தான் மக்களை காப்பாற்ற முடியும்.

**அமைச்சர் மா.சுப்பிரமணியனுக்கு பாராட்டு!**

அவ்வாறு மக்களை காப்பாற்றக்கூடிய பணியில் மக்கள்நல்வாழ்வுத்துறை சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என் மனதார வாழ்த்துகிறேன். மலைகளின் அரசி ஊட்டி என்று குறிப்பிடுவார்கள். ஆனால் ஒரு அரசு மாநில அளவில் திட்டத்தை நிறைவேற்றுகிறதற்கு தேர்வு செய்கின்ற இடமாக ஜமுனாமரத்தூர் மலைப்பகுதியை தேர்ந்தெடுத்தமைக்கு நான் பாராட்டுகிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் அளித்த கோரிக்கைகளை மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கட்டாயமாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் ஆட்சி நடத்துகின்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஜமுனாமரத்தூர் பகுதியில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியிருக்கிறார்கள். அவைகளை நிறைவேற்று வதற்கு அமைச்சர் பெருமக்கள் பெரும் உதவியாக இருக்கின்றார்கள். அந்தவகையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் இந்த மலைப்பகுதிக்கு பல்வேறு பணிகளை செய்துகொண்டிருக்கிறதற்காக மாவட்ட மக்கள் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சமீபத்தில் ஏற்பட்ட விபத்தில் தனது வலது காலை இழந்த தி.மு.கழக சென்னை மேற்கு மாவட்டப் பிரதிநிதி சிவராஜ் அவர்களுக்கு உதயநிதி ஸ்டாலின் அறக்கட்டளையின் மூலம் ரூ.4.50 லட்சம் மதிப்பிலான கார்பன் ஃபைபரில் தயாரிக்கப்பட்ட எடை குறைவான அதிநவீன செயற்கைக் காலினை நேற்று முன்தினம் (26.12.2024) வழங்கி பொருத்தினார்.



புதுச்சேரி முத்தியால்பேட்டை தொகுதி தி.மு.க. சார்பில் நடைபெற்ற தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவில், எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா கலந்து கொண்டு, கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை திறந்து வைத்து, நல உதவிகள் வழங்கினார். உடன் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.செந்தில்குமார், எல்.சம்பத், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.கோபால், மு.பிரபாகரன் ஆகியோர் உள்ளனர்.

